மதுரை சீடு குழந்தைகள் பேரவை வழங்கும் தனிச்சுற்று இதழ்

# புதுயுகம்

மலர்கின்ற உலகை நற்பணிகளால் காப்போம்

MADURAI SEED

உலகு 3 | பணிமடல் 12 | ஜுன்-செப்டம்பர் 2009 | நன்கொடை ரூ. 2/-

மதுரை சீடு-இன் 10ஆம் ஆண்டு கொண்டாட்டங்களின் நிறைவு சிறப்பிதழ் பிப்ரவரி 2008-ஜுன் 2009



எங்களை வழிநடத்தும் ஆசிரிய, சகோதர, சகோதரிகளுக்கு நன்றிகள் - மதுரை சீடு குழந்தைகள்

நான் குழந்தைகளை நேசிக்கிறேன். அவர்களோடு இருக்கும் போது நிறைய கற்றுக் கொள்கிறேன். குழந்தைகளோடு இருந்தால் அச்சூழல் நம்மை வாழ்வில் நிறைந்திருக்கும் மிக உன்னதமான, மிக ஆழமான நீதியையும், அறத்தையும் நோக்கி இட்டு செல்லும்.

உலகின் பல பிரச்சினைகள், சிறு குற்றம், மிகப்பெரிய போர், பயங்கரவாதம், சிறைகள் என்று எதுவானாலும் சரி அவற்றுக்கு காரணம் சிறார்களிடமிருந்து குழந்தைப் பருவம் பறிக்கப்பட்டதால் தான்.

ஒரு குழந்தையின் வெகுளித்தன்மை சிருஷ்டிகாரத் தன்மையின் விதை. அதுதான் இந்த உலகை சொஸ்தப்படுத்தும். நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த உலகின் பிரச்சினைகளுக்கான தீர்வு நம்முடைய இதயத்திலே புதைந்து கிடக்கிறது. அதைக் குழந்தைகள் தான் அடையாளம் காட்டுகிறார்கள். நோயால் பீடிக்கப்பட்டும், வாழ்க்கையின் அனுகூலங்கள் கிடைக்கப் பெறாமலும் இருக்கும் குழந்தைகள் உட்பட இந்த உலகத்தில் உள்ள எல்லா குழந்தைகளுக்கும் இன்றைய தினம் நான் நன்றி கூறுகிறேன். உங்களுடைய வலியும், வேதனையும் என்னை வெகுவாக பாதிக்கிறது.

1993,13வது கிராமி பரிசு பெற்ற மைக்கேல் ஜாக்சனின் ஏற்புரையின் ஒரு பகுதி- நன்றி சாருநிவேதிதா.

புதுயுகம் தனிச்சுற்று சிற்றிதழ், மதுரை சீடு வழிகாட்டலுடன் மதுரை சீடு குழந்தைகள் பேரவை குழந்தைகளால் வளமைக் கல்வி நோக்கில் வெளியிடப்படுகின்றது

# 2008-2009

**வாண்டுகள் அரங்கம்** | **வேர்கள் அரங்கம்** | **கனவுகள் அரங்கம்**














**தேடல்கள் அரங்கம்**



# கடையனும் கடைத்தேற

மதுரை சீடு மூலம் நலிவுற்றோர் வாழ்வில் வளமும் நலமும் பெற உழைக்கும் அனைத்து உள்ளங்களுக்கும், ஆதரவும் அரவணைப்பும் தருகின்ற சமூக ஆர்வலர்களுக்கும்,

எமது நன்றிகள்.

மதுரை சீடு நிறுவன 10ஆம் ஆண்டு கொண்டாட்டங்களால், இவ்வாண்டு முழுமையும் பரபரப்பும் சுறுசுறுப்பும் நிறைந்ததாக இருந்தது.

10, 12ஆம் வகுப்பு குழந்தைகள் மகிழ்ச்சிகரமான மதிப்பெண்களை பெற்றுள்ளனர். மதுரை சீடு இளைஞர்களும், குழந்தைகளும் நீங்கள் வழங்கும் ஆதரவால் வரும் காலங்களில் புதிய சாதனைகளையும் மாற்றங்களையும் செய்வார்கள் என நம்புகின்றேன். மதுரை சீடு நிறுவன 10ஆம் ஆண்டு நிறைவு கொண்டாட்ட சிறப்பிதழாக (ஜூன் - செப்டம்பர் 2009) புதுயுகம் 12வது இதழை சமர்ப்பிக்கின்றோம். பெரும்பாலும் மதுரை சீடு நிறுவன செய்திகளுக்கே முக்கியத்துவம் தரப்பட்டுள்ள இவ்விதழில் எழுத்தாளர் சு.வேணுகோபாலின் "மெய்பொருள் காண்பது அறிவு" என்ற சிறுகதை பிரசுரிக்கப்பட்டுள்ளது பெரும் வளர்ச்சிக்கு ஈடாக வறுமையும் வளர்ந்து வருகிறதோ என்ற ஐயம் நம்மை உலுக்குகிறது. தங்கள் தலைமுறையில் கிட்டாத கல்வி, வாரிசுகளுக்காவது கிடைக்க வேண்டும் என்ற ஏக்கங்களும், இயலாமைகளும், பொருளாதார நெருக்கடிகளும் உள்ள சாதாரண பெற்றோர்கள் இன்னும் இருக்கவே செய்கிறார்கள்.

கல்வி பெறுவதில் வறுமை ஒருபோதும் தடையாக இருக்கக் கூடாது.

குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும் வளமையான முழுமைத்துவக் கல்வி வழங்குதல் மூலமே சமூக மாற்றத்தை கொணர்ந்திட முடியும் என மதுரை சீடு திண்ணமுற நம்புகின்றது.

வாருங்கள். புது உலகம் கண்டிடுவோம். வாருங்கள் கல்வியினால் கடையனும் கடைத்தேற கடமையாற்றிடுவோம். வாருங்கள் புது உலகம் கண்டிடுவோம்.





A.S.கார்த்திக்பாரதி
&
ச.அருண்குமார்
புதுயுகம் ஆசிரியர் குழு

# மெய்ப்பொருள் காண்பது அறிவு

- சு. வேணுகோபால்

நேற்று மழை வராமல் இருந்திருந்தால் மகளைப் பார்த்துவிட்டு வரக்கூடிய இந்த வாய்ப்பு அமைந்திருக்காது. பரமசிவம் வாளி நீரைத் தூக்கிக் கொண்டு கிடுகு மறைப்பிற்கு குளிக்கப் போனார்.

மூன்று கடிதங்கள் போட்டுவிட்டான் மகன். ஓர் எட்டு மகளைப் பார்த்துவிட்டுத் திரும்பலாம் என்றால் வேலை தீரமாட்டேன் என்கிறது. மனைவிதான் "நாம பொறந்த லவிக்கு என்னைக்குத்தான் ஓய்வுகழிச்சல்னு வரும்? எந்த வேலையென்னாலும் போட்டுவிட்டு பிள்ளைய ஓர் எட்டுப் பார்த்துட்டு வாங்க" என்று மூன்று நாளாகவே பிடித்துத் தள்ளிக் கொண்டிருந்தாள்.

போனமுறை விடுமுறைக்கு வந்திருந்தவன் தன் அம்மாவிடம் இரவெல்லாம் குறைபட்டுக் கொண்டிருந்தான். சண்டை பிடிக்கும் குரலில் அவன் உன்னி உன்னி கத்துவதற்குப் பதில் பேசாமல் வெளித் திண்ணையில் படுத்துக் கிடந்தார் பரமசிவம். அண்ணனின் கஷ்டங்களை வாய் பிளந்தபடி வருத்தத்தோடு கேட்டுக் கொண்டிருந்தனர் தங்கையும் தம்பியும். ஆஸ்டலில் அரிசி மொந்தைமொந்தையாக இருக்கிறது. சரியான வேக விடுவதில்லை. வயிற்று வலி வருகிறது. தண்ணீராக கேரட் குழம்பும் ரசமும்தான் தினமும் என்று முறையிட்டான்.

"என்னடா ராசா செய்கிறது! இந்த மனுசன் ராத்திரி தண்ணி பாச்சப் போனா பகல்ல தூங்கும். பகல்ல தண்ணி பாச்சப்போனா ராத்திரியில தூங்கும். ஒரு சம்சாரிக்கு வேலைக்கிப் போயிட்டு எப்பிடியப்பா மருதைக்கெல்லாம் வர்றது? நீயே சொல்லு இந்தா ஒந் தங்கச்சி இந்த வருசத்தோட எட்டாப்பு முடிக்கிது. அடுத்த வருசம் இவள எங்க அனுப்புறதுன்னு தெரியல. தம்பி ஆறாப்பு முடிக்கிறான். நீ அப்படியே இந்த பத்தாப்பு கவர்மண்டு பரிட்சைய பாஸ் பண்ணிட்டய்யன்னா எங்களுக்கும் சொடக்கு எடுத்தது போல ஆயிடும்" என்று அவன் அம்மா ஏதோ சமாதானம் சொன்னாலும் இம்முறை பேச்சை வம்படியாக இழுத்துக்கொண்டுதான் இருந்தான்.

இந்த ஊரிலாவது இடைநிலை வகுப்பு வரை இருக்கிறது. பக்கத்து ஊர்களில் ஆரம்பப் பள்ளிகள்தான் இருக்கின்றன. பக்கத்து ஊர் பிள்ளைகள் எட்டாம் வகுப்பு வரை இந்தப் பள்ளிக்குத்தான் வருகின்றன. செல்மனூரை விட்டால் மதுரைக்குத் தான் கொண்டு போய்விடுகிறார்கள். ரத்தினத்தை செல்மனூரில் விட்டிருக்கலாம். பஸ்ஸிற்காக விலக்கிற்கு நாள்தோறும் நடக்க வேண்டும் சிரமத்தை நினைத்துத்தான் ஒரே மூட்டாக மதுரைக்கு அனுப்ப வேண்டியதாகி விட்டது.

கட்சிக்காரரைப் பிடித்துத்தான் பிற்பட்டோர் நல விடுதியில் சேர்த்தது. தோட்டந் துரவு இல்லை. கூலிக்காரக் குடும்பம்தான். வருட வருமானம் எட்டாயிரம். பிற்பட்ட ஜாதிதான் என்று சான்றிதழ்கள் வாங்க கிராம அதிகாரியிடமும் தாசில்தார் அலுவலகத்திற்கும் நாலு முறை நடக்க வேண்டியதாகிவிட்டது.

"ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஹாஸ்டல்ல படிக்கிறவங்களோட அப்பா, அம்மா வந்து பாத்திட்டுப் போறாங்க. நீங்க ஒரு தடவையும் வந்து பாக்கிறதில்ல. நீங்க வருவீங்க வருவீங்கன்னு பாத்திட்டு நிப்பேன். கடைசி வரைக்கும் வரமாட்டீங்க. அவங்கெல்லாம் என்னென்ன வாங்கிக் கொடுத்திட்டுப் போறாங்க! நீங்க திங்க எதாச்சும் கொண்டுவந்து குடுத்தீங்களா? ஞாயித்துக்கிழமை எல்லா பசங்களும் காசு வரும்ன்னு சொல்லிட்டிருப்பாங்க. என்னை எதுக்குப் பெத்தீங்க? ஒரு பத்து ரூவா கொடுத்திட்டுப் போயிருக்கீங்களா? ஓசி சோப்புல துணி தொவக்க எனக்கு சாகலாம் போல இருக்கு". தன்னை எதுக்கு இப்படி ஆஸ்டலில் கொண்டுபோய் தள்ளிவிட்டீர்கள் என்று ஊருக்கு வந்த இரவு அம்மாவோடு மல்லுக்கு நின்றான். இது ஒன்றரை வருடமா நடக்கும் கதைதான்.

நான்கு நாட்களுக்கு முந்தி வந்த கடிதத்தில் இரண்டு நாள் காய்ச்சலாகப் படுத்திருந்ததைப் பற்றி எழுதியிருந்தான். கடிதம்வந்த நாளே மகனைப் பார்த்துவிட்டு வர வேண்டும் என்று ஆத்தாக்காரி துடியாய்த் துடித்தாள். அவளுக்கு ரொம்ப ஆசை, மகன் தங்கி படிக்கும் இடத்தைப் பார்க்க வேண்டுமென்று. கருதறுப்பு சமயத்தில் போனால் அறுப்புக்காரிகள் கூட்டு சேர விடமாட்டார்கள். அது மட்டுமில்லாமல் வீட்டிலிருக்கும் பிள்ளைகளுக்கு ஆக்கி வைக்கவேண்டும். அவள் தனியாக மதுரைக்குப் போய்த் திரும்ப முடியாது. புருசனோடு போனால்தான் ஆச்சு. ஒவ்வொரு காரணங்களாகத் தலையெடுக்க, போகாமலே இருக்க வேண்டியதாகிவிட்டது.

நேற்று சனிக்கிழமை நல்ல மழை விழுந்ததால் கரும்பிற்கு தண்ணீர் பாய்ச்சலை மூன்று நாள் தள்ளிப் போடலாம். தோட்டத்துக்காரரிடம் இந்த சந்தர்ப்பத்தை விட்டால் இனியொரு முறை மகனைப் பார்க்க வாய்ப்பு கிடைக்காது என்று கூறி ஐம்பது ரூபாயை வாங்கி வந்தார். கல்யாணம் காய்ச்சிக்கென்று போடுவதற்கு வைத்திருந்த இரண்டு சட்டைகளும் தேய்க்காமல் சுருங்கி போய்க் கிடந்தன. துவைத்தவள் தேய்க்காமல் சுருட்டி வைத்திருக்கிறாள். பரமசிவம் எடுத்து உதறி உதறிப்

பார்த்தபோதுதான் தெரிந்தது. "சட்டையைக்கூட தேச்சு வைக்க மாட்டீங்களா" தண்ணீருக்குப் போய் வந்தவளைப் பார்த்துத் திட்டினார்.

"அட மனுசா! நீ இப்பிடி காசலையா மகனைப் பாக்க கௌம்புவன்னு யாரு கெனா கண்டா?" என்று பெருமிதத்தோடும் குட்டுவைப்பதுபோலும் பேசியபடி குடத்தைத் திண்ணையில் இறக்கிவைத்தாள். நேற்றே மகனைப் பார்க்கப் போவதாக முடிவாகியிருந்தால் வண்ணாத்தியிடம் கொடுத்துத் தேய்த்து வைத்திருப்பாள். இப்போது துவைக்கப் போயிருப்பார்கள். "எங்கயாவது கௌம்புறப்பதான் ஒனக்கு ஞாபகமே வரும் எல்லாம் ஒங்க வீட்டுப் பழக்கம்". திட்டியபடியே வெள்ளைச் சட்டையை போட்டுக்கொண்டார். "எங்க அப்பன இழுக்காம ஒன் வாயி சும்மா இருக்காதே" முறைத்தாள்.

"யப்பா... நாங்களும் வர்றோம்பா" என்றனர் குழந்தைகள்.

"அடுத்த வாட்டி கூட்டிட்டுப் போறேன். போனதும் திரும்பணுமில்லையா?" என்றார்.

அவரது இரண்டு கைகளையும் பற்றிக்கொண்டு வீட்டுக்குள் பரமசிவம் போகும் இடத்திற்கெல்லாம் பிள்ளைகள் நகர்ந்தார்கள்.

"கவலைப்படாதே. அம்மா நல்லா இருக்கான்னு சொல்லுங்க. அவன் எம் மேல உசிரா இருப்பான். ஏம்மா வந்து பாக்கமட்டேங்கிறீங்கன்னு போனவாட்டியே அழுதான். இந்த வருணபகவான் வெள்ளிக்கிழமை வந்திருந்தா அவனுக்கு வாய்க்கு ருசியா ஏதாவது செஞ்சிருப்பேன். கவர்மண்டு பரிச்சை. கொஞ்சம் பாத்து கவனமாக படிக்கச் சொல்லுங்க. மூத்த பிள்ளைய இப்பிடி கண்காணாத எடத்தில் விட்டுட்டிருக்கிறத நெனச்சா என் ஈரக்கொலையே நடுங்குது".

"அட, எங்காவது போறப்ப மூக்க சிந்தாதன்னு எத்தனை வாட்டி சொல்றது" என்று அதட்டினார். சமையல் செய்யாத சாக்கை வைத்து பிள்ளைகளைக் கூட்டிப் போக முடியாது என்றார்.

குழந்தைகளிடம் சாக்குபோக்கு சொல்லித் தப்பிப்பதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது. இன்றென்னவோ மதுரை வண்டியில் கூட்டம் இல்லாதிருந்து. தோட்டத்துக்காரரிடம் நூறு ரூபாய் கேட்டார். அவர் "திடுதிடுப்புன்னு நூறு கேட்டா நா எங்க போறது? ஜேப்பில இருக்கிறது. இந்த அம்பதுதான். வேற இல்ல" என்று கையை விரித்து விட்டார். இங்கிருந்து மதுரைக்கு ஐம்பது மைலுக்குக் குறையாமல் இருக்கும். போக பதினைந்து, வர பதினைந்து மகன் இருக்கும் இடம் வடக்கு அண்ணா நகர் பகுதிக்கு டவுன் பஸ் பிடித்துப் போக வேண்டும். பரமசிவமும் மனைவியும் பணம் புரட்ட வடக்கு தெற்கு என்று ஓடியதிலேயே ஒன்பது மணியாகிவிட்டது. அவளை சமையல் செய்யச் சொல்லிவிட்டு தோட்டக்காரரை தேடிப் போயிருக்கலாம் என்று பட்டது.

பெரியவன் ரத்தினம் படித்து ஆளாகி வந்துவிட்டால் பெரிய சுமை குறைந்துவிடும். அவன் உயரத்திற்கு போலிஸ் வேலையோ மிலிட்டரி வேலையோ கிடக்கும் என்று சொல்கிறார்கள். எல்லாம் ஆண்டவன் செயல். இவன் ஏதாவது ஒரு வேலையில் தொத்திக் கொண்டு தங்கச்சியைக் கரையேற்றிவிட்டானென்றால் போதும். அப்புறம் சின்னவனை எப்படியும் படிக்கப் போட்டுவிடலாம்.

புளியமரக் கூடாரத்தினூடே காற்றை கிழித்துக்கொண்டு பஸ் படு வேகமாகப் போகிறது. பரமசிவத்தின் நினைவில் மஞ்சணத்திக் கிளை ஆடியது. அதில் தொங்கும் தூக்குவாளி. சின்ன வயசில் படிப்பில் அவன் படுகெட்டிக்காரன். அவனால் ஐந்தாம் வகுப்பைத் தாண்ட முடியாமல் போய்விட்டது. முருகேசபிள்ளை பண்ணையில்தான் அவன் அய்யா வண்டியோட்டிக் கொண்டிருந்தார். சிறுவர்களுக்கு அப்போது அரை ஆள் கூலி வழக்கத்தில் இருந்தது. ஆள் கூலி ஒன்னரை ரூபாய். அரையாள்கூலி முக்கால் ரூபாய். அய்யா இவனையும் வேலைக்கிக் கூட்டிட்டுப் போ என்று ஆத்தாவை விரட்டுவார். சிவனாண்டி தோடத்திற்குப் போனால் சரளைமேடு வேப்பமரத்தில் தூக்குச்சட்டியைத் தொங்கவிட்டு பள்ளிக்கூடத்திற்கு ஓடிப்போவான். வெயில் ஏறும்வரை தன் ஆத்தாவோடு வேலை செய்வது போல பாவ்லா காட்டுவான். அய்யா முதல் வண்டியை ஓடையில் நிறுத்திவிட்டு எட்டிப் பார்ப்பார். ஆள் இருப்பான் என்று தெரிந்ததும் போய்விடுவார். வெயில் நேரத்தில் வரமாட்டார். போட்டுக் கொண்டு வண்டி ஓடையைக் கடந்துவிடும். வண்டி முருகேசபிள்ளை தோட்டத்தில் போய் கொட்டி விட்டு கொட்டத்திற்கு வர பதினோரு மணியாகிவிடும். வண்டி கடந்ததும் பள்ளிக்கூடத்திற்கு ஓட்டம். நான்கு மணிக்கு பள்ளிக்கூடம் விட்டதும் நேராக ஆத்தாவுடன் சேர்ந்து வேலை செய்வான். சில சமயம் வெயில் தாழ களத்துமேட்டில் தட்டை எடுக்க அய்யா வண்டி ஓட்டி வருவார். அப்போது இருக்கிற மாதிரி காட்டிக்கொண்டால் போதும். தங்கமணி கவுண்டர் தோட்டத்திற்குப் போனால் மஞ்சணத்திக் கிளையில் தூக்குவாளிய மாட்டிவிட்டு பள்ளிக்கூடத்திற்கு ஓடுவான்.

எப்படியோ இந்த ரகசியம் தெரிந்து சாட்டைக் குச்சியால் ஒரு நாள் வெளுவெளு என்று வெளுத்து வாங்கிவிட்டார். அப்புறம் இதைவிட கவனமாக பள்ளிக்கூடத்திற்கு ஓடத் தொடங்கினான். இதற்கெல்லாம் காரணம் வேலுச்சாமி வாத்தியார்தான். இவன் கணக்கில் படுசுட்டியாக இருந்ததால் தோளில் தட்டிக் கொடுத்து உற்சாகமூட்டுவார். மீசை வடிவேல் வாத்தியார் நடத்திய அறிவியல்

பாடத்திலிருந்து கேள்வி கேட்கும் போதெல்லாம் பதில் டாண் என்று இவனிடமிருந்து வரும். மற்றவர்களுக்கு முதுகில் திடும்திடும் என்று அடி விழும். இவனுக்கு ‘சபாஷ்’ வரும். ஆனாலும் ஆசைப்பட்டது போல நடக்கவில்லை. ஆறாம் வகுப்புக்குப் பஸ் ஏறியோ சைக்கிளிலோ செல்லமனூர் போக முடியவில்லை.

ஆறாம் வகுப்பில் சேர்வதற்கு ரிக்கார்டு சீட் வாங்க உடன்படித்தவர்கள் பெற்றோருடன் போவதைப் பார்த்ததும் மறுபடி படித்தே தீரவேண்டும் என்ற வெறி கிளர்ந்தது. அப்போதெல்லாம் ஊருக்குள் குடி வரவில்லை. முருகேச பிள்ளையின் கிலுவை மரத் தோட்டத்தில் உள்ளமாட்டுக் கொட்டகையின் வடகோடித்தடுப்பிலிருந்துதான் ஐந்தாம் வகுப்புவரை சென்றான். வாரியின் இரண்டு புறங்களில் ஆறு ஆறு கிலுவைமரங்கள் இருந்தன. அதிகமும் காக்காய்கள்தான் தங்கிக் கரையும். கிலுவை மரங்களின் ஆக்கைகள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பெருங்குடையாக நிற்கும். புரட்டாசி ஐப்பசியில் துளிர்த்து நிற்பதைப் பார்த்தால் கொலைகாரன் கூட மனசைப் பறிகொடுத்துவிடுவான். தூரத்தில் தெரியும் மலை மேய்ச்சல் தரை போல மரங்களின் உச்சி பச்சைப் பசேலென புல் குன்றுகளாக ஜொலிக்கும். மரக்கிளை அருகில் சென்று பார்த்தால் தான் கிலுவையின் சின்னச் சின்ன இலைகளைக் காண முடியும்.

வண்டித்தடத்திலிருந்து கிழக்கால் போனால் சிவனாண்டி தோட்டம். ரிக்கார்டு சீட் வாங்க தெற்கு வரப்பில் இறங்கி ஆத்தாவோடு போகும்போதுதான் அழுதான். அது அகலமான வரப்பு. சங்கம்புதர் மேடாக இருந்ததை சிறுகச்சிறுக இரு பக்கத்து விவசாயிகளும் வெட்டி நிலமாக்கி விட்டதால் நடைபாதையாக மாறிவிட்டது. ரிக்கார்டுசீட்டு வாங்கி வருவதும் வாங்கப் போவதும் ஒவ்வொரு குடும்பத்திலும் மகிமைக்குரிய விசயம். அப்பாகூட “வாங்கி என்னத்தச் செய்யப்போறான்? எங்ககூடமாட அலஞ்சான்னா மம்பிட்டி பிடிக்க கை வளையும்” என்றுதான் பல் சந்தில் காய்ந்த புல்தண்டால் குத்தியபடி சொன்னார். கடைசித் தங்கச்சி எழுந்து கயிற்றுக் கட்டிலைப் பிடித்தபடி நடக்கத் தொடங்கியதை ஆசையோடு பார்த்துக் கொண்டிருந்த ஆத்தா, “ஏலேய். பள்ளிக்கூடத்திலேயே கெடந்தா பொழப்பு என்ன ஆகும்டா?” என்று சொன்னபோது அவனுக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது.

படிப்பைத் தொடர முடிகிறதோ இல்லையோ ரிக்கார்டு சீட்டை வாங்கி நெஞ்சோடு அணைத்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசை பிடித்ததாட்டியதால் உருண்டு புரண்டு ஆத்தாவை இழுத்துச் செல்லமுடிந்தது. வரப்பு ஓடைக்கரையில் போய் முட்டியது. ஊழிப்பழங்கள் கொத்துக்கொத்தாக தொங்கின. ஓடையில் நின்றபடி அம்மா குச்சிகளை வளைத்து கருங்கனிகளை உருவி வாயில் போட்டாள். பச்சைக்காய்களை நீக்கி இவனுடைய வாயிலும் போட்டாள். “அம்மா, செல்லமனூரில் போயி படிக்கிறேம்மா... சொல்லும்மா. ஹும். நான் படிக்கத்தான் போவேன்.. சொல்லும்மா” ஓடையில் அழுது அடம் பிடித்தபடி பின்தொடர்ந்தான். ஆத்தா புலம்பினாள். “ஒங்கப்பங்காரன் என்னைய குடியில வைக்கமாட்டானேடா” “நீ.. சொல்லும்மா... நான் படிக்கிறேன். இல்லேன்னு வச்சுக்கோ, கற்பகம் அக்கா மாதிரி மருந்து குடிச்சுப் செத்துப் போவன்..” “அட.. நாயி.. வாய மூடு. என்ன பேச்சு பேசுற?” “அப்ப நான் ஸ்கூலுக்குப் போறேம்மா” சரி பாப்போம்டா. வாய வச்சுக்கிட்டுவா. “சரின்னு சொல்லும்மா”. “அதான் பாப்போமன்னுட்டனில்ல”. ஆனாலும் அழுகை நிற்கவில்லை. கண்ணீர் வழிந்து வழிந்து கன்னமெல்லாம் பிசுபிசுப்பு அப்பிக் கிடந்தது.

பள்ளிக்கூட வாசல் வந்ததுமே மீசை வடிவேல் வாத்தியார் மூன்றாம் வகுப்பு வாசலில் நின்றிருப்பது தெரிந்தது. இவருக்கு சாமி என்றால் பிடிக்காது. வேலுச்சாமி வாத்தியாருக்கென்றால் சாமி பக்தி அதிகம். அடுத்து அவர் வகுப்புக்கு வரப்போகிறார் என்றால் கரும்பலகையின் அடிக்கட்டையில் படிந்திருக்கும் சாக்பீஸ் பொடியை ஆள்காட்டி விரலில் அழுந்த வழித்து நெற்றியில் திருநீறு வைத்துக் கொள்வான். கணக்கு வாத்தியாருக்கு அடுத்து வடிவேல் வாத்தியார் வந்தால் நெற்றியில் இட்ட சாக்பீஸ் தூளை அழித்துவிடுவார்கள் பையன்கள். ஒரு நாள் கணக்கு வாத்தியார் வரப்போவதாக நினைத்து கரும்பலகையில் படிந்த தூளை அள்ளி வைத்துவிட்டு கமுக்கமாக அமர்ந்திருந்தபோது மீசை வாத்தியார் நுழைந்துவிட்டார். பையன்கள் “சார் சார் இவனப் பாருங்க சார். நெத்தியில பொட்டு வச்சிருக்கான்” என்று காட்டிக்கொடுத்துவிட்டார்கள். உடனடியாக அழிக்கவும் முடியவில்லை. குபுக்கென கண்களில் நீர் பெருகிவிட்டது. அவர் நெருங்கி வருவதைப் பார்த்து எழுந்து ஓடிவிடலாமா என்று தோன்றியது. அவர் கன்னத்தைப் பிடித்துச் சொன்னார். “உனக்கு பொட்டு வைக்கணும்ன்னு ஆசையிருந்தா வச்சுக்கோ.. என்ன” “சார் இனிமே வைக்கமாட்டேன் சார்” மலங்கமலங்க விழித்தபடி சொன்னபோது வழிந்தோடியது கண்ணீர். “நெஜமாதாண்டா சொல்றேன். எனக்காக வைக்காம வராதே” என்றார்.

ஆத்தா கொடிக்கம்பத்தருகில் நின்றாள். “எங்கடா போயி கேக்கிறது.” “அம்மா எங்க வாத்தியார்மா..” என்று மீசை வாத்தியாரை நோக்கி ஓடினான். அவர் இவனைப் பார்த்ததும் “பேசுறவங்க பேர போர்டுல எழுதிவை நாகு. இந்த வர்றேன்” என்று சத்தமாகச் சொல்லிவிட்டு திடலுக்கு

வந்தார். "என்னடா பரமசிவம்.. டிசி. வாங்க வந்தயா?" "இல்ல சார் ரிக்கார்டு சீட்டு" "அததான்டா சொன்னேன்" ஆத்தா திடலின் வழியாக நெருங்கி வந்தாள். வாத்தியாரைப் பார்த்தது; தலையைச் சாய்த்து புன்னகைத்தாள்.

"வாங்கம்மா. எந்த ஸ்கூல்ல சேக்கப் போறீங்க?"

"இவங்க அப்பாகிட்ட..."

"ஓம் மகன் நல்ல படிப்பாளிம்மா. கெட்டிக்காரனா வருவான். இவனுக்கு படிப்பு அப்பிடி வருதும்மா"

"இல்ல சார். இசுகூல்ல சேக்கலை சார்"

"ஏம்மா..."

"வீட்டில கைப்பிள்ளை இருக்குங்க சார். இவன் பிள்ளைய பாத்துக்கிட்டான்னா நானும் வேலைக்கிப் போவேன். இவங்கப்பாவும் படிக்க வேணாமன்னுட்டாரு. தோட்டத்தில இருக்கிறதுனால பிள்ளைய பாக்க ஆளு வேணும் சார்"

"யம்மா, எம் பையனுக்கு இப்பிடி படிப்பு வல்லையேம்மா. படிப்ப பாழாக்கிடாதீங்கம்மா. நான் வேணா ஸ்கூலுக்கு சேக்க பணத்தைத் தர்றேம்மா. நோட்டு புத்தகம் எல்லாம் எடுத்துத் தர்றேன். ஒங்க வீட்டுக்காரர கூட்டிட்டுவாம்மா. நான் பேசுறேன். இந்த மாதிரி பசங்கதான் படிச்சு மேல வரணும்மா"

ஆத்தா முந்தானையால் கண்களைத் துடைத்தாள். அவளது அடிவயிறு குலுங்குவது அசலாகத் தெரிந்தது. மூக்கு மடல் சிவந்து விட்டது. இமை மயிர்களின் ஈர மினுமினுப்பைப் பார்க்க அவனுக்கும் அழுகை வந்து. மீசை வாத்தியார் ஹெட்மாஸ்டர் அறைக்கு அழைத்துச் சென்றார். அதன்பின் ஆத்தாவோ, அய்யாவோ மீசை வாத்தியாரைப் பார்க்கப் போகவில்லை.

மதுரை ஆரப்பாளையத்தில் இறங்கியதும் பசி கவ்விப் பிடித்தது. டவுன் பஸ் ஏறும் இடத்திற்கு மாறி வந்தார். ஆரியபவனுக்குள் ஆட்கள் நுழைந்து கொண்டிருந்தனர். சாக்பீசால் எழுதிய உணவுப் பட்டியல் பலகை கடையின் சுவரில் சாய்ந்திருந்தது. முட்டைக்கோஸ் பொரியல், வடக்கு அண்ணாநகர் போகும் வண்டி இல்லை. எப்போது வரும் என்று கேட்கலாமா என்று தொலைபேசி பக்கம் நிற்பவனிடம் திரும்பினார். கேட்க சங்கடமாக இருந்ததால் பேசாமல் நின்று கொண்டார். ஆட்டோக்கள் பேருந்துகளின் இடைவெளியில் நுழைந்துபோய்க் கொண்டிருந்தன. நா வறண்டது. கடுமையான வெயில். மழை வரும் போல இருந்தது. வேர்த்தொழுகிய கழுத்தை வேட்டி நுனியால் துடைத்தபடி திரும்பினார். ஆரிய பவனிலிருந்து குழம்புவாசம் சுழன்று வந்து. வடக்கு அண்ணாநகர் வண்டி சற்று முந்திதான் போனது என்றார் பக்கத்தில் நின்றிருந்த ஒருவர். அடுத்த வண்டி எப்போதென்று தெரியவில்லை. பசி பிடுங்கியது. ஆரியபவனுக்குள் நுழைந்தார்.

சாப்பிட்டதற்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு வந்தார். அளவு சாப்பாடு பதினாறு ரூபாய். பசி ஒன்றும் அடங்கவில்லை.

பஸ்ஸைப் பிடித்து வடக்கு அண்ணா நகர் பிற்பட்டோர் நல மாணவர் விடுதிக்கு வர இரண்டு மணியாகி விட்டது. சாக்கடையோரம் இருந்த மூன்று சவுக்கு மரங்களைக் காணவில்லை. அழுக்கேறிய மஞ்சள்கட்டிடத்தின் அருகேஇருந்த துவைகல்லில் நாலைந்து மாணவர்கள் துவைத்துக் கொண்டிருக்கிறார்கள். கட்டிடத்தின் வலப்புறம் துத்திச் செடிகள் ஆளுயரத்திற்கு வளர்ந்து புதராய் மண்டிக்கிடந்தன. ரத்தினத்தை முதன்முதலில் சேர்த்துவிட்டுச் சென்ற மறு வாரமே ஒருமுறை பார்த்துவிட்டுத் திரும்பியதுதான். இங்கு வந்து ஒன்றரை வருடத்திற்கு மேலாகி விட்டது.

படிக்கட்டில் அமர்ந்திருந்த பையன் "யாரைப் பாக்கணும்" என்றான். "ரத்தினம். நான் ரத்தினத்தோட அப்பா" என்றார். சிமெண்ட் பெஞ்சில் போய் உட்கார்ந்தார். கட்டிடத்தின் வடக்குப்புறம் இருந்த வேப்ப மரத்தினடியில் பெற்றோர்கள் துண்டை விரித்து அமர்ந்து பிள்ளைகளோடு பேசிக்கொண்டிருப்பது தெரிந்தது.

"ரத்தினம், ஒங்க அப்பா வந்திருக்கார்டா" வராந்தாவில் நின்று அவன் சத்தமாகக் குரல் கொடுத்தான்.

சிமெண்ட் பெஞ்ச் சூடேறியிருந்தது. இதுவே ஒரு மரத்தினடியில் இருந்தால் காலாற நீட்டிப் படுக்கலாம்.

ரத்தினம் துண்டைக் கட்டியபடி ஓடிவந்தான். "யப்பா..." அவன் குரல் அவர் நெஞ்சுக்குள் ஈரத்தோடு இறங்கியது.

"எப்பப்பா வந்தீங்க? சட்டை தொவச்சிகிட்டு இருந்தேம்பா.."

"இப்பத்தான்டா"

"வாங்கப்பா. எதுக்கு வெய்யில ஒக்காந்திருக்கீங்க"

அவன் வராந்தா பக்கம் கூட்டிக்கொண்டு வந்தான். அவன் நெஞ்சாங்கூட்டில் எலும்புகள் வரிவரியாகத் தெரிந்தன. அவனைத் தொட்டு நீவி விட வேண்டும் போல் மனசு அடித்தது.

“என்னடா இப்பிடி மெலிஞ்சு போயி இருக்க?”

“நல்லாதானப்பா இருக்கேன்”

விடுதிக்குள் இருந்த சிமெண்ட் திண்ணையில் அமர்ந்தான். பழைய துண்டு நைந்துபோய் இருந்தது. மூன்று நான்கு இடங்களில் ஓட்டைகள். உள் திண்ணையில் பெற்றோர்கள் சிலர் அமர்ந்திருந்தனர்.

“அம்மா எப்பாடியிருக்குப்பா”

“நல்லா இருக்குடா”

“தங்கச்சி.. தம்பி...”

“நான் ஒன்னப் பாக்க வர்றேன்னு சொன்னதும் ரெண்டு பேரும் கௌம்பி நின்னுட்டாங்க”

“கூட்டிட்டு வந்திருக்கலாமில்லப்பா” “..........”

“வேற சட்டையில்லையாப்பா?” “ஏண்டா”

“சுருக்க சுருக்கமா இருக்கு. நா வேலைக்குப் போனதும் ஒங்கள ஒக்கார வச்சு கஞ்சி ஊத்துவேம்பா. பரிச்ச முடியிற வரைக்கும் அம்மாவ கவலைப்பட வேணாமன்னு சொல்லுங்கப்பா”. பெரிய மனிதன் தோரணையில் அவன் பேசுவது பெரும் பலத்தைக் கொடுத்தது.

“எவ்வளவு படிக்கப் பிரியமோ அவ்வளவு படிப்பா” ஒருவித உத்வேகத்தில் அவர் வாய் குழறியது.

அவன் பேசாமல் அப்பாவை பார்த்தான். வாய்ப்பேச்சுக்காகக் கூட 'சாப்புட்டியாப்பா' என்று கேட்க முடியாமல் தவித்தான். ஒன்றரை மணியோடு மெஸ் முடிந்துவிடும்.

தின்பதற்கு அவனுக்கு ஏதாவது வாங்கி வந்திருக்கலாமோ என்று தோன்றியதும் பையத் தொட்டு தடவினார். கையை விட்டு எடுத்தார். பதினைந்து ரூபாய் இருந்தது. பையனுக்குத் தந்தார். 'வேணாம்பா' என்றவன் மறுபடி நீட்டவும் வாங்கிக் கொண்டான். உடம்பைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு கிளம்பினார்.

டவுன் பஸ் ஸ்டாப் வரவும் திடுக்கென்றது. டவுசர் பையையும் சட்டைப் பையையும் துழாவினார். பணமில்லை. அப்படியே நடந்து விடலாமா என்று தோன்றியது. எவ்வளவு தூரம் நடப்பது! எவ்வளவு கேவலமாக ஆக்கிவிட்டது பசி. சாப்பிடாமல் இருந்தால் செத்தா போயிருப்பேன்? யாரிடம் கேட்பது?

எந்தப் பக்கமும் நகராமல் நிறுத்தத்திலேயே சிறிது நேரம்நின்றார். வெயில் முகததில் அடித்தது. ஏதோ காய்ச்சல் என்று எழுதியிருந்தானே, அதை ஒருவார்த்தை விசாரிக்காமல் வந்துவிட்டோமோ என்று மனசு அழுத்தியது.

“ரத்தினம். உங்கப்பா வந்திருக்காரு” என்று குரல் வர வாசலுக்கு ஓடி வந்தான்.

அவர் சிமெண்ட் பெஞ்ச் ஓரம் நின்றிருந்தார்.

“என்னப்பா?” என்று வேகமாக வந்தான். அவன் நடையில் கிழிசல் தெரிந்து தெரிந்து மறைந்தது. கிழிசலை உள்விட்டு துண்டைக் கட்டியிருக்கிறான். நெருங்கியதும் அவரால் நேருக்கு நேர் பார்க்க முடியவில்லை.

“என்னப்பா வந்துட்டீங்க”

“ஒரு அஞ்சு ரூபா கொடு” என்றார். அரைஞான் கயிற்றை நெகிழ்த்தி இடுப்பு வேட்டி மடிப்பிலிருந்து அப்பா கொடுத்த பதினைந்து ரூபாயை திரும்பக் கொடுத்தான்.

“அஞ்சு ரூவா”

“பஸ்ஸுக்கு இருக்காப்பா?”

பேசாமல் வாங்கிக்கொண்டவர் மகனை ஏறிட்டுப் பார்க்காமல் வேப்பமரத்தை மலங்க மலங்க பார்த்தார். வரட்டுமாடா என்ற குரல் எழும்பவே இல்லை.

“நீ வந்து பாத்ததே போதும்பா. அம்மாகிட்ட சொல்லுப்பா. இனிமே வந்தா சண்டை பிடிக்க மாட்டேன்னு”


ஆசிரியர் குறிப்பு :

எழுத்தாளர் கு.வேணுகோபாலின் முதல்கதை – அபாயச்சங்கு (1994) நாவல் – நுண்வெளிகிரகங்கள் குறுநாவல்கள் – கண்ணிகள், வேதாளம் ஒளிந்திருக்கும். கூந்தப்பனை அடிப்படையில் விவசாயி வளர்ந்து வரும் எழுத்தாளர் கு.வே. நமது சிடு அமைப்பின் நண்பர் என்பது மகிழ்ச்சிகரமான செய்தி.

# நாங்கள் தீட்டியவை...




A.பிரபாகரன்
IX



A.திலீபன்
XI




O.வீரபாண்டி
X



சிவபாண்டி
VI



C.சுபாஷ்
XI




M.விஜயராணி
V



M.மதுமஸ்வரி
IX



M.பிரதீப்ராஜா
XI



K.முத்துமாரி
XII



S.சரவணன்
XI



P.முனியசாமி
V

## புதுப்பள்ளி

என்னோட பேர் N.பிரதீபா. நான் ஆறாம் வகுப்பு படிக்கிறேன். நான் அஞ்சாப்பு வரைக்கும் பட்டுப்பூச்சி ஸ்கூல்ல படிச்சேன். இப்ப ஒ.சி.பி.எம். ஸ்கூல்ல படிக்கிறேன். 5ஆவது வரைக்கும் தமிழ் மீடியத்தில் படிச்சேன். இப்ப இங்கிலீஷ் மீடியம் படிக்கிறேன். புது ஸ்கூல் ரொம்ப நல்லா இருக்கு. டீச்சர் எல்லாம் நல்லா சொல்லித் தர்றாங்க. நல்ல நண்பர்கள் கிடச்சு இருக்காங்க. நாங்க எல்லோரும் மதியம் ஒன்னா உக்காந்துதான் சாப்பிடுவோம். புது ஸ்கூல்ல சேர்க்க சீடு–தான் ரொம்ப உதவி பண்ணுச்சு. எங்க கிளாஸ்ல மொத்தம் 74 பேர். ஜுன் மாச டெஸ்ட் வச்சாங்க. நான் ரொம்ப நல்லா எழுதுனேன். புது ஸ்கூலில் என் பெயர் மறையாத அளவுக்கு சாதனை படைக்க போறேன். அப்ப நீங்க என்னை கண்டிப்பா பாராட்டனும்.

N.பிரதீபா
VI

## கூடி வாழ்

ஒரு காட்டில் ஒரு முயல் இருந்து. அந்த முயலுக்கு ஒரு குட்டி முயல் பிறந்தது. முதலில் எல்லா முயல் குடும்பமும் ஒரு கூட்டமாக வாழ்ந்து வந்தன. அந்த கூட்டத்திடம் தேவையில்லாமல் அம்மா முயலும், குட்டி முயலும் சண்டை போட்டுவிட்டு தனியே வந்துவிட்டன. தனியே வந்த முயலுக்கு இரண்டு நரிகளின் நட்பு கிடைத்தது. நரி போலியாகத்தான் முயலிடம் பழகியது. ஒரு நாள் ஒரு நரி இன்னொரு நரியிடம் "குட்டியாக இருந்தாலும் இந்த முயல் கொழுகொழுவென்று இருக்கிறது, பெரிய முயல் இரைதேடி சென்றவுடன் இதை சாப்பிட்டு விடுவோம்" என்று கூறியது. அம்மா முயல் இதை மறைந்திருந்து கேட்டுவிட்டது. உடனே தப்பித்தோம் பிழைத்தோம் என குட்டியை கூட்டிக்கொண்டு ஓட ஆரம்பித்து விட்டது. வழியில் தன்னுடைய முயல் கூட்டத்தை கண்டது. தன் தவறை உணர்ந்து தன் கூட்டத்தினரிடம் மன்னிப்பு கேட்டுவிட்டு கூட்டத்துடன் சந்தோசமாக வாழ்ந்தது.

N.ரம்யபாரதி
V

## எனக்கு பிடித்த தோழி

எனக்கு பிடித்த தோழி விஜயலெட்சுமி. நாங்க ரெண்டு பேரும் ஒரே ஸ்கூல்ல ஒரே வகுப்புல படிக்கிறோம். மே மாச லீவுக்கு அவங்க வீட்டுக்கு போயிருந்தேன். அங்க எல்லாரும் என் மேல் பிரியமாக இருந்தார்கள். எனக்கு டீ, பிஸ்கட் எல்லாம் கொடுத்தார்கள். அவங்க வீட்டுக்கு பின்னாடி ஒரு தோட்டம் இருந்தது. அது எனக்கு ரொம்ப பிடித்தது. அங்கெய இருக்கணும் போல இருந்துச்சு. அவங்க கிட்ட பேச முதலில் எனக்கு கூச்சமாக இருந்தது. ஆனா அவங்க குடும்பத்தில எல்லாரும் என் மேல் பாசமாக இருந்தார்கள். மத்தியானம் அவங்க வீட்டுலேயே சாப்பிட்டோம். மாம்பழம் எல்லாம் வாங்கிக் கொடுத்தாங்க. அன்னிக்கு நான் ரொம்ப சந்தோசமாக இருந்தேன். இனிமே அடிக்கடி அவங்க வீட்டுக்கு போகணும்னு நெனச்சுகிட்டேன்.

R.மாரியம்மாள்
VII

## பள்ளியில் முதல் நாள்

லீவு முடிஞ்சு ஜுன் மாசம் ஒண்ணாம் தேதி பள்ளிக்கூடம் திறந்தாங்க. முதல் நாள் ரொம்ப நேரம் வெளையாண்டதால காலயிலே எந்திருக்கவே பிடிக்கல. ஆனால் முதல் முதல் நாள் ஸ்கூலுக்கு போறதால கஷ்டப்பட்டு எந்திரிச்சு கிளம்புனேன். ஸ்கூல்ல முதல் நாள் யாரயுமே அடிக்க மாட்டாங்க. முதல் நாளே பாடம் நடத்தி அறுக்க மாட்டாங்க. புது டீச்சர் வருவாங்க. புதுப் பையங்க வருவாங்க. புது புக்கெல்லாம் தருவாங்க. ஆனாலும் நான் பிரேயருக்கு லேட்டா போயிட்டேன். முதல் நாளுங்கறதாலே பி.டி. சார் யாரயும் அடிக்கல. என்னோட கிளாஸ்ல நாலு புதுப்பசங்க சேர்ந்தாங்க. நாலு பேரும் எனக்கு நண்பர்களாயிட்டாங்க. நாங்க அஞ்சு பேரும் தொட்டுபிடிச்சு வெளையாண்டோம். கிரவுண்டுல ஒரு 1 ரூ காய்ன் கிடந்தது. யாருதுன்னு எல்லோர்கிட்டேயும் கேட்டுப்பார்த்தோம். அங்கன்னகுள்ள இருந்தவங்க தன்னது இல்லைனு சொன்னாங்க. நாங்க உடனே ஒரு ரூபாயை வைச்சு என்ன செய்யலாமுன்னு யோசிச்சேன். பின்ன பாட்டிட்ட ஒரு ரூபாய குடுத்து மாங்கா வாங்கி தின்னோம். அன்னைக்கி ஸ்கூல் சீக்கிரமாக விட்டுருச்சு. ஒரு ரூபாயை யார் வந்து கேட்டாலும் தீர விசாரிச்சுகிட்டு 4 பேரும் சேர்ந்து கொடுத்திடனும். பேசி சிரிச்சிகிட்டு வீட்டுக்கு வந்துட்டோம் (அது சரி யார் வந்து ஒரு ரூபாயை கேட்டா, எப்படி சரியா கண்டுபிடிச்சு திரும்பி தர்றது. ஐடியா சொல்லுங்களேன்).

P.கார்த்தி
VII

| | | | |
|---|---|---|---|
| மதுரை சீடு குழந்தைகள் பேரவை | தலைவர்கள் | M.மருடபதி N.நாகலெட்சுமி | |
| | அரங்கபிரதிநிதிகள் | வாண்டுகள் | நமச்சிவாயம், சுவாதி, |
| | | வேர்கள் | முத்துகணேஷ்,ஜென்சிராணி |
| | | கனவுகள் | மருடபதி, நாகலெட்சுமி |
| செந்தமிழ் நூலகம் | அரங்கபிரதிநிதிகள் | வாண்டுகள் | ஜோயல், |
| | | வேர்கள் | கௌதம், |
| | | கனவுகள் | சரவணபிரியா |
| | | தேடல்கள் | M.அமுதா |
| இலக்கிய மன்றம் | அரங்கபிரதிநிதிகள் | வாண்டுகள் | சஞ்சய்குமார் |
| | | வேர்கள் | சரண்யா |
| | | கனவுகள் | இந்திரா |
| | | தேடல்கள் | அழகிரி |
| புதுயுகம் சிற்றிதழ் | அரங்கபிரதிநிதிகள் | வாண்டுகள் | மாணிக்கராஜா(பொறுப்பு) |
| | | வேர்கள் | முத்துகணேஷ் |
| | | கனவுகள் | திவ்யபாரதி, கற்பகஜோதி |
| | | தேடல்கள் | அருண்குமார் |
| தேன்கூடு வங்கி | அரங்கபிரதிநிதிகள் | வாண்டுகள் | வித்தியா |
| | | வேர்கள் | கார்த்திக் |
| | | கனவுகள் | தங்கலெட்சுமி |
| | | தேடல்கள் | அன்பரசன் |
| வான்முகில் மன்றம் | அரங்கபிரதிநிதிகள் | வாண்டுகள் | கௌசல்யா |
| | | வேர்கள் | மதன் |
| | | கனவுகள் | பிரியா |
| | | தேடல்கள் | முனியசாமி |
| அறிவியல் மன்றம் | அரங்கபிரதிநிதிகள் | வாண்டுகள் | ஹரிபிரசாத் |
| | | வேர்கள் | மகேஸ்வரி |
| | | கனவுகள் | சரவணக்குமார் |
| | | தேடல்கள் | சரண்யா |
| சமூகஅறிவியல் மன்றம் | அரங்கபிரதிநிதிகள் | வாண்டுகள் | மகாலெட்சுமி |
| | | வேர்கள் | பழனிக்குமார் |
| | | கனவுகள் | பார்வதி |
| | | தேடல்கள் | முருகபாண்டியன் |
| விளையாட்டு மன்றம் | அரங்கபிரதிநிதிகள் | வாண்டுகள் | சிவராம் |
| | | வேர்கள் | சுமதி |
| | | கனவுகள் | மஞ்சுளா |
| | | தேடல்கள் | சுரேஷ்ராஜன் |
| மருத்துவ மன்றம் | அரங்கபிரதிநிதிகள் | வாண்டுகள் | விஜயலெட்சுமி |
| | | வேர்கள் | கௌசல்யா |
| | | கனவுகள் | மணிகண்டன் |
| | | தேடல்கள் | விஜய் |
| பங்கேற்புக்கான குழந்தைகள் இயக்கங்களின் தமிழக மற்றும் புதுவை கூட்டமைப்பு மதுரை மாவட்ட பிரதிநிதிகள் | அரங்கபிரதிநிதிகள் | வேர்கள் | முத்துக்கணேஷ், சர்மிளா, ஜென்சிராணி |
| | | கனவுகள் | பாண்டியராஜன்(+தென்மண்டல பிரதிநிதி) |
| மதுரை சீடு இளைஞர்கள் பேரவை | | தலைவர்கள் | R.கார்த்திக், M.அமுதா |
| | அரங்கபிரதிநிதி | தேடல்கள் | S.சுல்தான் அலாவுதீன் |
| புதிய வெளிச்சங்கள் காலாண்டு தனிச்சுற்று இளைஞர் சிற்றிதழ் | அரங்க பிரதிநிதி | தேடல்கள் | M.பெரியசாமி |
| இளைஞர் வங்கி | அரங்க பிரதிநிதி | தேடல்கள் | O.மோகன் |

## மதுரை சீடு தேர்தல் 2009-2010

***தேர்ந்தெடுக்கப்பட்டவர் பட்டியல்***

| | |
|---|---|
| வாண்டுகள் அரங்க தலைவர்கள் | - ராம்குமார் S., ஆனந்தஜோதி A. |
| வேர்கள் அரங்க தலைவர்கள் | - சூர்யா M. கௌசல்யா .K |
| மதுரை சீடு குழந்தைகள் பேரவை தலைவர்கள் | - மாணிக்கராஜா M.முத்துமாரி .K |
| மதுரை சீடு இளைஞர்கள்பேரவை தலைவர்கள் | - முருகபாண்டி .S சரண்யாதேவி .P |
| FCMRP மண்டல பிரதிநிதி | - முத்துகணேஷ் S. |
| FCMRP மாவட்ட உறுப்பினர்கள் | - முத்துகணேஷ், ஷர்மிளா, ஜென்ஸிராணி |

## கரும்பாலையில் கடந்த 10 ஆண்டுகளில் 10ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் சிறப்பிடம் பெற்றவர்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1997-1998 | G.உமாதேவி | 467 | D/o.கோவிந்தசாமி, பாலாமணி கிழக்குத்தெரு, கரும்பாலை, மதுரை-20. | செங்குந்தர் உயர்நிலைப்பள்ளி |
| 2002-2003 | P.சதீஸ்குமார் | 469 | S/o. G.பாண்டியன், P.நாகலெட்சுமி தெற்குத்தெரு, கரும்பாலை, மதுரை-20. | செங்குந்தர் உயர்நிலைப்பள்ளி |
| 2002-2003 | M.அனீஸ்பாத்திமா | 466 | D/o. முகம்மது முஸ்தபா, சிராஜ் நிஷா நடுத்தெரு, கரும்பாலை, மதுரை-20. | ஓசிபிஎம் மேல்நிலைப்பள்ளி |
| 2002-2003 | K.நூருல் சாஹிதா | 453 | D/o. காதர்மைதீன், குபுறா நடுத்தெரு, கரும்பாலை, மதுரை-20. | ஓசிபிம் மேல்நிலைப்பள்ளி |
| 2003-2004 | G.விஜய் | 475 | S/o.P.கணேசன், G.பால்பாண்டியம்மாள் கிழக்குத்தெரு, கரும்பாலை, மதுரை-20. | ஆறுமுகம்பிள்ளை சீதையம்மாள் மேல்நிலைப்பள்ளி,திருப்பத்தூர் |
| 2007-2008 | N.அனீஸ்பாத்திமா | 470 | D/o.நாகூர்கனி, சரிபாபீவி கிழக்குத்தெரு, கரும்பாலை, மதுரை-20. | ஓசிபிஎம் மேல்நிலைப்பள்ளி |
| 2007-2008 | C.சரண்யா | 452 | D/o.R.சந்திரன், C.தமிழ்ச்செல்வி கிழக்குத்தெரு, கரும்பாலை, மதுரை-20. | ஓசிபிஎம் மேல்நிலைப்பள்ளி |
| 2008-2009 | P.மகேஸ்வரி | 475 | D/o.பஞ்சநாதன், மகுடீஸ்வரி நடுத்தெரு, கரும்பாலை, மதுரை-20. | காக்கைபாடினியார் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி |
| 2008-2009 | P.திலீப்குமார் | 460 | S/o.பாண்டியராஜன், நாகரெத்தினம் நடுத்தெரு, கரும்பாலை, மதுரை-20. | செங்குந்தர் உயர்நிலைப்பள்ளி |

## கரும்பாலையில் கடந்த ஆண்டுகளில் 12ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் சிறப்பிடம் பெற்றவர்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 2004-2005 | P.சதீஸ்குமார் | 1085 | S/o.G.பாண்டியன்-P.நாகலெட்சுமி தெற்குத்தெரு, கரும்பாலை, மதுரை-20. | விருதுநகர்இந்துநாடார் மேல்நிலைப்பள்ளி |
| 2005-2006 | G.விஜய் | 1102 | S/o.P.கணேசன், G.பால்பாண்யமமாள் கிழக்குத்தெரு, கரும்பாலை, மதுரை-20. | SMSV.மேனிலைப்பள்ளி, காரைக்குடி |
| 2006-2007 | S.விக்கி | 1037 | S/o.செல்வராஜ், S.இந்திரா மேலத்தெரு, கரும்பாலை, மதுரை-20. | தியாகராசர் மேல்நிலைப்பள்ளி |
| 2007-2008 | T.தங்கராஜ் | 1026. | S/o.G.தெய்வேந்திரன், T.ராணி மேலத்தெரு, கரும்பாலை, மதுரை-20. | இளங்கோ மேல்நிலைப்பள்ளி |
| 2007-2008 | M.மருதுபாண்டி | 1002 | S/o. N.மணி, M.பாண்டியம்மாள் P.T.காலனி, கரும்பாலை, மதுரை-20. | தியாகராசர் மேல்நிலைப்பள்ளி |
| 2008-2009 | M.தங்கலெட்சுமி | 1036 | D/o.முருகேசன், M.சுந்தரி கிழக்குத்தெரு, கரும்பாலை, மதுரை-20. | மீனாட்சி சுந்தரேஸ்வர் மேல்நிலைப்பள்ளி |
| 2008-2009 | P.சரவணக்குமார் | 1035 | S/o.பாண்டியராஜன்,நாகரெத்தினம் நடுத்தெரு, கரும்பாலை, மதுரை-20. | தியாகராசர் மேல்நிலைப்பள்ளி |

மேற்கண்ட விபரங்கள் நமக்கு கிடைத்த தகவல்களின்படி தொகுக்கப்பட்டது. பட்டியல் முழுமையானதல்ல.

**கரும்பாலையை தலைமையகமாக கொண்டு கடந்த ஆண்டுகளில் குழந்தைகள் மன்றத்தையும், மற்றும் குழந்தைகள் பேரவையையும் முன்னெடுத்துச் சென்றவர்கள்**

| ஆண்டு | தலைவர் | தத்தனேரி பிரதிநிதி | சம்பக்குடி பிரதிநிதி |
|---|---|---|---|
| 1999 - 2000 | கூட்டமைப்புக் குழு | | |
| 2000 - 2001 | C.செந்தில்ராஜா | | ஜமீலா பேகம் |
| 2001-2002 | S.சசிகலா | | கலைச்செல்வி |
| 2002-2003 | M.மகேந்திரன் | M.பெரியசாமி | சத்யா |
| 2003-2004 | M.அனீஸ் பாத்திமா | G.மணிகண்டன் | முத்துபாண்டி |
| 2004-2005 | M.சுந்தர்ராஜன் | கமலம் | கவிதா |
| 2005-2006 | M.தங்கலெட்சுமி | காமாட்சி | சபிதாபானு |
| 2006-2007 | S.விக்கி - M.அமுதா | | |
| 2007-2008 | C.கற்பகஜோதி - M.சுரேஷ்ராஜன் | | |
| 2008-2009 | M.மகுடபதி, N.நாகலெட்சுமி | | |

## அண்ணாத்தே என் கவிதை எப்படி?

*ராமனிடம் இருக்கும் வில்லு*
*எங்கள் சீடுக்கு இருக்கு தில்லு*
*மூனு கடலுக்கு மேல் இமயமலை*
*எங்க சீடு தரும் அன்பு மழை*
*கடல் மீன் செத்தா கருவாடு*
*நம் சீடு கொடுத்தா தேன்கூடு*
*காட்டில் வாழும் சிங்கம்*
*சீடு நண்பர்கள் சொக்கத்தங்கம்*
*பூவுக்குள் இருப்பது மொட்டு*
*மதுரை சீடு நண்பர் எல்லாம் இளம் சிட்டு*

M.மதன்
IX

பலரை அழவைக்கும் உண்மையை விட
சிலரை சிரிக்கவைக்கும் பொய்யே
மேலானது.
எ.கா. நீங்க ரொம்ப அழகாய் இருக்கீங்க.

கசப்பான அனுபவங்கள் இல்லையென்றால்;
இனிப்பான விசயங்களை நாம் உணரவே முடியாது.

ப.ராம்கி
X

# ஜப்பான் நாட்டுச் செய்திகள்

★ உலகிலேயே மிகச் சிறிய தேசிய கீதம். ஜப்பான் நாட்டு தேசிய கீதம் தான். நான்கே வரிகள் கொண்டது.
★ ஜப்பான் நாட்டின் தலைநகர் டோக்கியோ
★ ஜப்பானியர்கள் சாப்பிடுவதற்கு முன் “இடாகிமசூ” என்று சொல்வார்கள். “உணவு பொருள் தயாரித்து வழங்கியவர்களுக்கு நன்றி” என்று அர்த்தம்.
★ ஜப்பானில் பூக்களை அடுக்கும் முறைக்கு “இக்கபானா” என்று பெயர்.
★ ஜப்பானியர்கள் சுறா மீனை கடல் தங்கம் என்று அழைக்கப்படுகிறார்கள்.
★ சிவகாசிக்கு குட்டி ஜப்பான் எனப் பெயரிட்டவர் ஜவஹர்லால்நேரு.
★ ஜப்பானில் எரிமலை எனும் 60 அடி உயர மரங்கள் வளர்கின்றன. சூரிய அஸ்மணத்தின் போது இம்மரத்தின் நுனியிலிருந்து வெண்புகை எழும்புவதால் இப்பெயர் வந்ததாம்.

மா.மாணிக்கராஜ்
X